தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.02.2024 அன்று அவரது முகாம் அலுவலகத்தில் தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளிடம் நடிகர் சங்க கட்டட பணியைத் தொடர்வதற்காக சங்கத்துக்கு வைப்பு நிதியாக ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையை தனது சொந்த நிதியில் இருந்து வழங்கினார். உடன் நடிகர் சங்க நிர்வாகிகள் நாசர், விஷால், கார்த்தி, கருணாஸ், பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.

ஒரு டிரில்லியன் டாலர் வளர்ச்சிக்கான உத்திகள்!

எடப்பாடி பழனிசாமிக்கு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

சென்னை, பிப். 16 -

“முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையைக் கொஞ்சமாவது கவனித்திருந்தால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகள் என்னென்ன என்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கும்” என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்த பிறகு வெளியே செய்தியாளர்களிடம் பேட்டி அளித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அவர்கள். விவாதத்தில் காற்றோடு கத்திச்சண்டை போட்டவருக்குக் கைத்தட்டல்கள் கிடைக்குமா? என எண்ணி வெளியே சென்று பேசியிருக்கிறார்.

“திமுக ஆட்சியில் நிறைய குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை அறிக்கைகள் அளித்ததா? அந்த குழுக்களை பற்றிய வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்” எனப் பேசியிருக்கிறார். அந்தக் குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் அரசின் செயல்பாட்டை, நிதிநிலையை மேம்படுத்த அமைக்கப்பட்டவை. அவை நிர்வாகம் தொடர்பானவை. அதனைப் பொதுப் பார்வைக்கு வைக்கவேண்டியதில்லை என்பது முதலமைச்சராக இருந்தவருக்குத் தெரியாதா? நீட் தேர்வு குறித்த ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் போன்ற குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சராக இருந்தவருக்குத் தெரியாதா?

“சென்னையைப் பாதித்த மிக்ஜாம் புயல், தென் மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் பாதிப்புகளுக்குச் செலவழித்த தொகை விவரங்களை தரவில்லை” எனவும் சொல்லியிருக்கிறார். இந்தப் பாதிப்புகள் கடந்த டிசம்பரில் ஏற்பட்டவை. ஒரு மாதத்திற்குள்ளாகவே செலவு விவரத்தை எப்படித் தர முடியும்? பாதிப்படைந்த சாலைகள் உட்பட பல பணிகள் தொடர் செலவினமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, செலவு எவ்வளவு? என்று கேட்கிறாரே முதலமைச்சராக இருந்த ஒருவர்.

“ஒரு டிரிலியன் டாலர் பொருளாதார வளர்ச்சி என்றார்கள். அதற்காக என்ன உத்திகள் கடைப்பிடிக்கப்படுகின்றன எனச் சொல்லவில்லை” எனப் புலம்பியிருக்கிறார். “தமிழ்நாட்டை 2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை வைத்துச் செயல்படுகிறோம்” என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த இலக்கை எட்டத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையைக் கொஞ்சமாவது கவனித்திருந்தால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகள் என்னென்ன? என்பது அவருக்குத் தெரிந்திருக்கும்.

- இந்தியாவின் பொருளாதார வளத்திற்கு 9% பங்கைத் தருகிறது தமிழ்நாடு.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தமிழ்நாடு இரண்டாவது இடம்.
- ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சி 8.19%.
- இந்தியாவின் பணவீக்கம் 6.65%. ஆனால், தமிழ்நாட்டின் பணவீக்கம் 5.97% ஆகக் குறைந்து விட்டது.
- தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு 3ஆவது இடத்துக்கு உயர்த்தப்பட்டது.

இப்படி பட்டியல் போட்டுச் சொல்லியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இவைதான் ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்லும் உத்திகள். இலக்கை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருப்பதற்கான சான்றுகள். இதனை எதிர்க்கட்சித் தலைவர் புத்தியில் ஏற்றிக் கொள்ளட்டும்.

நாடாளுமன்றத்தை முடக்கிய லட்சணம் தெரியாதா?

”காவிரி பிரச்சினைக்கு உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்திச் சரியான தீர்ப்பைப் பெற்றோம். அதை நடைமுறைப்படுத்த மத்திய அரசு காலதாமதம் செய்தபோது அதிமுகவின் 37 எம்.பிக்கள் 22 நாட்கள் நாடாளுமன்றத்தையே முடக்கினார்கள். திமுக கூட்டணிக்கு 38 எம்.பிகள் இருக்கிறார்களே. எங்களைப் போல திமுக போராடி மத்திய அரசிடம் இருந்து நிதியைப் பெற்றிருக்க முடியும்” என்று சொல்லியிருக்கிறார். பழைய பேப்பரை எல்லாம் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள் பழனிசாமி அவர்களே. காவிரிக்காக நாடாளுமன்றத்தை முடக்கிய உங்கள் லட்சணம் என்ன? என்பது தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லும் அந்த சம்பவம் 2018இல் எதற்காக நடந்தது? ஆந்திராவிற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்காததைக் கண்டித்து தெலுங்கு தேசம், ஒய்எஸ்ஆர், காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். அதனை நிறைவேற்ற விடாமல் தடுப்பதற்காக அதிமுக எம்.பிகள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்திப் பல நாட்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தை முடக்கினார்கள். “அதிமுகவுக்கும் பாஜகவுக்கும் மேட்ச் பிக்ஸிங் உள்ளது” என அன்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் மல்லிகார்ஜுனகார்கேவேகுற்றம்சாட்டியதை எல்லாம் மறந்துவிட்டீர்களா?

மோடி அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிடக் கூடாது என்கிற பாஜகவின் அஜண்டாவைதான் அன்றைக்கு அதிமுக செயல்படுத்தியது. உண்மையிலேயே காவிரிக்காகத்தான் அன்றைக்கு நாடாளுமன்றத்தை அதிமுக முடக்கியது என வைத்துக் கொண்டால், “காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் விஷயத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்போம்” எனச் சொன்ன கே.சி.பழனிசாமியை மின்னல் வேகத்தில் கட்சியைவிட்டு ஏன் நீக்கினீர்கள்? அன்றைக்கு கே.சி.பழனிசாமி பா.ஜ.க.வுக்கு எதிராகப் பேசிவிட்டார் என்றதும் உடனே எஜமான விசுவாசம் வெளிப்பட்டது. ”காவிரிக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அதிமுக ஆதரிக்க வேண்டும்” என அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களிடம் கோரிக்கை வைத்தபோது, ”ஆந்திரா பிரச்சினை வேறு. நமது கோரிக்கை வேறு” என பாஜகவிற்கு ஆதரவாகத்தானே பதில் சொன்னீர்கள்.

அ.தி.மு.க. எம்.பி.க்களை அவமானப்படுத்திய பிரதமர்!

2014 செப்டம்பரில் சொத்துக் குவிப்பு வழக்கில் முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையை நீதிபதி குன்ஹா அவர்கள் விதித்தபோது, ’காவிரியை வச்சுக் கோங்கா. . அம்மாவைத் தா’ என போஸ்டர் ஒட்டியவர்கள்தானே அதிமுகவினர். காவிரிக்காக அ.தி.மு.க போராடியது எம்.ஜி.ஆர். ஜெயலலிதா காலத்தோடு போய்விட்டது. 2016இல் ஜெயலலிதா அப்பல்லோவில் சிகிச்சை பெற்ற நேரத்தில், ‘காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும்’ என வலியுறுத்தி அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் பிரதமர் மோடி அவர்களைச் சந்திக்க அவரது அலுவலகத்துக்குப் போனபோது, தடுத்து நிறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்ட வரலாற்றை எல்லாம் மறந்துவிட்டீர்களா?

“தேர்தல் அறிக்கையில் சொன்ன அறிவிப்புகளில் 10% மட்டுமே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நிறைவேற்ற முடியாத கவர்ச்சிகரமான அறிவிப்புகளை தேர்தல் அறிக்கையில் சொல்லி மக்களை ஏமாற்றியிருக்கிறீர்கள்” எனச் சொல்லியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். சட்டமன்றத் தேர்தலின்போது மக்களுக்கு அளித்த 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளை நிறைவேற்றிய விவரத்தை 2022 மார்ச்சில் சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். அதன்பிறகும் பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆட்சிக்கு வந்த உடனேயே 505 வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட வேண்டும் என யாராவது கேட்பார்களா? அது சாத்தியமா? ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான் வாக்குறுதிகள் அனைத்தும் நிறை வேற்றப்படும். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி இருக்கிறது. படிப்படியாக மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றும். ‘அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் இலவச செல்போன், இலவச செட்டாப் பாக்ஸ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் நாளொன்று 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட அம்மா குடிநீர், அம்பேத்கர் அறக்கட்டளை என அதிமுக தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளை எல்லாம் நீங்கள் நிறைவேற்றி விட்டீர்களா?

ஊரக வேலைவாய்ப்பு 100 நாளில் இருந்து 150 நாட்களாக உயர்த்துதல், சேது சமுத்திரத் திட்டம், நீட் தேர்வு ரத்து போன்ற வாக்குறுதிகள் எல்லாம் என்னாச்சு என கேள்வி எழுப்பியிருக்கிறார். இவையெல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டியில் உள்ளவை. நிதிப் பகிர்வு முதல் திட்டங்கள் வரை ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. ஒன்றியத்தில் மோடி ஆட்சி மாறி இந்தியா கூட்டணி அமைந்தால்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு கிடைக்கும். அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

சாலை விபத்தில் உயிரிழந்த

போக்குவரத்து காவல் அதிகாரி குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, பிப். 17 -

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ.25 லட்சம் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் ஜஸ்டின் (வயது 53) த/பெ. ஜோசப்பின் என்பவர் 15- 2-2024 அன்று பிற்பகல் பணி நிமித்தமாக இரு சக்கர வாகனத்தில் நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலை, இரணியல் காவல் சரகம், அக்கினியானா குளம் அருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த சாலை விபத்தில் லாரி மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

பணியின் நிமித்தமாக சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட சாலை விபத்தில் போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜஸ்டின் அவர்கள் உயிரிழந்துள்ளது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜஸ்டின் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான தீர்ப்பு:

சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப்.16

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

“தேர்தல் பத்திரங்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானவை என மாண்பமை உச்சநீதிமன்றம் மிகச் சரியான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இது வெளிப்படையான தேர்தல் நடைமுறையையும், அமைப்பின் ஒழுங்கையும் உறுதிசெய்திடும். இந்தத் தீர்ப்பு மக்களாட்சியை மீட்டிருப்பதோடு அனைத்து அரசியல் கட்சிகளும் சமதளத்தில் போட்டியிடும் வாய்ப்பையும் வழங்கியிருக்கிறது. மேலும் இது அமைப்பின் மீதான சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது”.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்!

திருச்சியில் டி.ஆர்.பாலு எம்.பி. - கரூரில் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அழைப்பு !

திருச்சி, பிப். 17 -

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, திருச்சி கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டம் திருச்சியில் இன்று (17.02.2024- சனிக்கிழமை) மாலை 05.00 மணிக்கு புத்தூர் நால் ரோட்டிலும் அதே போல கரூரில் நாளை (18.02.2024 -ஞாயிற்றுகிழமை) மாலை 6 மணிக்கு கரூர் பேருந்து நிலையம், திருவள்ளுவர் திடலிலும் நடைபெறும் இக்கூட்டங்களுக்கு திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும்படி மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்பில் மகேஸ் பொய்யா

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு :

2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக, அதிமுக அரசின் 10 ஆண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், மக்கள் பட்ட துன்பங்களை நேரடியாக கேட்டறிந்திட தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் (விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்) என்ற தேர்தல் பரப்புரையை நடத்தி, அராஜக அதிமுகவை மக்கள் நிராகரிக்கப்பதற்கான அடித்தளமிட்டனர். வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த 10 ஆண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து, தற்போது நாடகமாடும் அடிமை அதிமுகவின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் நாடாளுமன்ற தொகுதி வாரியாக தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்திட வேண்டுமென்று நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நடைபெறும் இக்கூட்டங்களில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), பாக பொறுப்பாளர்கள் (BLC), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக தொண்டர்களும், பொது மக்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சா.பீட்டர் அல்போன்ஸ் - இறையன்பன் குத்தூஸ் தலைமை! துறைமுகம் காஜா - டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை -

சமய நல்லிணக்கப் பேரவை சார்பில் கருத்தரங்கம்!

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - செஞ்சி மஸ்தான் மற்றும் பேராசிரியர் காதர் மொகிதீன், தயாநிதிமாறன் சிறப்புரை!

சென்னை, பிப்.17

சமய நல்லிணக்கப் பேரவை சார்பில் ‘மதவெறி மாளட்டும் - மனிதநேயம் ஆளட்டும்’ என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் இன்று (17.2.2024) மாலை 4 மணிக்கு, எழும்பூர் இரெயில் நிலையம் எதிரில் உள்ள இம்பீரியல் பைஜ் மகாலில் நடைபெறுகின்றது.

கருத்தரங்கிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத் தலைவர் துறைமுகம் காஜா, கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவி பாத்திமா முஸப்பர், எழும்பூர் பகுதி தென்றல் நிசார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மயிலாடுதுறை மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் அகமது ஷாவலியுல்லா வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக்கருத்தரங்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் செஞ்சி மஸ்தான், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், தயாநிதிமாறன் எம்.பி., எம்.எம். அப்துல்லா எம்.பி., எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., எம். அதுல் ரகுமான், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஷாநவாஸ் எம்.எல்.ஏ., எம்.ஷத்துதீன் பாகவி, ருமைஸ் பைஜி, எம். எஸ்.பஷீர் அகமது, பெரோஸ் கான், வி.சுதாகர், எம்.ஆர்.டி. ரகுமான், இ.மொய்தீன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

ஏ.எம்.ஜெய்தூன் நன்றி கூறுகிறார்.

கழகத்தின்

கொள்கை விளக்காக ஒளி வீசியவர்!

கயல் தினகரன் மறைவு குறித்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 16-

“கழகத்தின் கொள்கை விளக்காக ஒளி வீசியவர் கயல் தினகரன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கொள்கை விளக்காக ஒளிவீசிய கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் திரு. கயல் தினகரன் அவர்கள் மறைந்தார் என்ற துயரச் செய்தி வந்தடைந்தது என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது.

பகுத்தறிவுக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு திராவிடக் கருத்தியலை உள்வாங்கி கழகமே தன் மூச்சென செயல்பட்ட முன்னோடிதான் நமது கயல் தினகரன் அவர்கள். இதழியல் துறையில் மின்னிய அவரது எழுத்தாற்றல் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களால் பட்டை தீட்டப்பட்டது.

அவரது ‘தென்னகத் தலைவன்’ ஏட்டினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலியில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் பெற்றார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களது கரங்களால் பெற்ற பெருமைக்குரியவர். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கருப்பு சிவப்பே தனது வாழ்வென இருந்த கயல் தினகரன் இயற்கையின் மடியில் துயில் கொள்ளச் சென்றிருப்பது கழகத்துக்குப் பேரிழப்பாகும்.

கயல் தினகரன் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழகத் தோழர்கள் அனைவர்க்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

ஜலகண்டபுரம் முரசொலி முகவர்

ஆர்.ஏ.எஸ்.பாஸ்கரன் இல்ல மணவிழா!

கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

சேலம், பிப். 17 -

சேலம் மாவட்டம் - ஜலகண்டபுரம் முரசொலி முகவர் ஆர்.ஏ. எஸ். பாஸ்கரன் பி.சாந்தி இணையரின் மகள் பி. உஷாவுக்கும், ஜலகண்டபுரம் ஜி.விஜயன் வி.சித்ரா இணையரின் மகன் ஜி. சௌந்தர்ராஜனுக்கும் திருமணம் 19.2.2024 அன்று (திங்கட்கிழமை) காலை 6 மணிக்கு சேலம் மாவட்டம் வையப்பமலை கொங்கு திருமண மாளிகையில் நடைபெறுகிறது. இத்திருமண விழாவில் கழகத்தினரும் உறவினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். முன்னதாக திருமண வரவேற்பு நிகழ்ச்சி நாளை (18.2 2024) மாலை 6:30 மணிக்கு நடைபெறுகிறது

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் ஒன்றியம் ஆலந்துறை பேரூராட்சியில் நடைபெற்ற முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சியில் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் ஒன்றிய செயலாளர் சாமி, பேரூர் கழக செயலாளர் ரங்கசாமி, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா உள்பட பலர் கலந்து கொண்டனர்.